# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 161/மா/2025
நாள் 22.06.2026

S.V. கார்த்திக் பாபு,
மதுரை. --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 3 (மத்தியம்),
மதுரை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 125, மணப்பாக்கம், தனலட்சுமி நகர், பிளாக் "D" கதவு எண் 13, 14–A-S-1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.கார்த்திக் பாபு என்பவரின் 15.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.04.2025 அன்று பெறப்பட்டு 161/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 125, மணப்பாக்கம், தனலட்சுமி நகர், பிளாக் "D" கதவு எண் 13, 14–A-S-1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.கார்த்திக் பாபு என்பவர் தனது 15.04.2025 மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "நான் குடும்பத்துடன் 13, 14-A-S-1 1 பிளாக் "D" தனலெட்சுமி நகர், மணப்பாக்கம், சென்னை–600 125–ல் வசித்து வருகிறேன். என்னுடைய தந்தை S.R.விவேகானந்தன் அவர்கள் 03.07.2020ல் காலமாகி விட்டார்கள். ஆகவே, மேற்கண்ட முறைமன்ற நடுவத்தில் நான் ஆஜராக என்னை அனுமதிக்கும்படி பணிவுடன் பிரார்த்திக்கிறேன். எங்கள் குடும்பத்துக்கு சொந்தமான மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 3, வார்டு எண் 52, தெற்குமாசி வீதி, பச்சரிக்கார 2வது சந்து, கதவு எண்.1/2, வரி விதிப்பு எண் 115/052/900417 கட்டிடம் குடியிருப்பு உபயோகமாகவும், வரிவிதிப்பு எண்.115/052/903288–க்குட்பட்ட சுமார் 85 சதுரடியுள்ள கட்டிடம் வணிக உபயோகமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியின் சார்பாக குப்பை வரி மாதம் 1க்கு ரூ.1000/– வீதம் 01.04.2023 முதல் தவறுதலாக விதிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டணம் பிரிவு–3 "ஐ" பிரகாரம் மாதம் 1க்கு ரூ.200/– மட்டுமே குப்பை வரியாக விதிக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
>
> மதுரை மாநகராட்சி மண்டலம் 3, பொதுத் தகவல் அலுவலர் அவர்களால் ந.க.எண். ம3/இ1/006376/2023, நாள் 24.12.2023 தகவல் அறியும் உரிமைச் சட்ட கடிதத்தில் சிறிய கடைகளுக்கு மாதம் 1க்கு ரூ.200/–வீதம் குப்பை வரி விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாதம் 1க்கு குப்பைவரியாக ரூ.1000/– என்று

தவறுதலாக விதிக்கப்பட்ட குப்பை வரியை ரத்து செய்து மாதம் 1க்கு ரூ.200/– வீதம் குப்பை வரியை நிர்ணயித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் பிராத்திக்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 16.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி ஆணையாளர் தனது 13.04.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

''தற்சமயம் மதுரை மாநகராட்சியில் சட்டமன்ற தேர்தல் 2026 தேர்தல் நடத்தும் பணி பார்க்கப்பட்டு வருவதால் தாங்கள் குறிப்பிட்டுள்ள 16.04.2026 அன்று நேரில் ஆஜராக இயலாத நிலை உள்ளது. எனவே, சட்டமன்ற தேர்தல் பணிகள் முடிவடைந்த பின்னர் மாற்று தேதியை தெரிவிக்கும்பட்சத்தில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு தொடர்பான விசாரணையில் கலந்து கொள்ள ஏதுவாக மாற்று தேதி தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

5. எதிர்மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று 16.04.2026 அன்று நடைபெறவிருந்த விசாரணையை மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்ட விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

6. மேற்கண்ட மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 26.05.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. இந்நிலையில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளர் தனது 19.05.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்:–

''மனுதாரர் திரு. S.V.கார்த்திக் பாபு என்பவரின் மனு பரிசீலினை செய்யப்பட்டது. கள அலுவலர்களின் குறிப்பின்படி, தாங்கள் குறிப்பிட்டுள்ள பச்சரிக்கார 2வது சந்தில் செல்போன் கடை செயல்படுகிறது.

எனவே மனுதாரரின் வரிவிதிப்பு எண்.115/052/903288–க்கு திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டணம் அட்டவணை 1–ல் வணிகம்–3ல், வரிசை எண் 'ஐ'–ன்படி மாதம் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனுதாரரின் சொத்துவரி விதிப்பில் திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டணம் 2023–2024ஆம் ஆண்டு முதல் ரூ.1000/– லிருந்து ரூ.200/– ஆக வரிக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்ட கடித நகல் இத்துடன் இணைத்து தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விபரம் அறிக்கையாக பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.''

8. மனுதாரர் திரு. S.V. கார்த்திக் பாபு என்பவர் 26.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''நான் குடும்பத்துடன் 13, 14-A-S-1 1 பிளாக் "D" தனலெட்சுமி நகர், மணப்பாக்கம், சென்னை – 600 125–ல் வசித்து வருகிறேன். என்னுடைய தந்தை S.R.விவேகானந்தன் அவர்கள் 03.07.2020ல் காலமாகி விட்டார். மேற்கண்ட முறைமன்ற நடுவத்தில் நான்

ஆஜராக என்னை அனுமதிக்கும்படி பணிவுடன் பிரார்த்திக்கிறேன். எங்கள் குடும்பத்துக்கு சொந்தமான மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 3, வார்டு எண் 52, தெற்குமாசி வீதி, பச்சரிக்கார 2வது சந்து, கதவு எண்.1/2, வரி விதிப்பு எண் 115/052/900417 கட்டிடம் குடியிருப்பு உபயோகமாகவும், வரிவிதிப்பு எண்.115/052/903288–க்குட்பட்ட சுமார் 85 சதுரடியுள்ள கட்டிடம் வணிக உபயோகமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியின் சார்பாக குப்பை வரி மாதம் 1க்கு ரூ.1000/– வீதம் 01.04.2023 முதல் தவறுதலாக விதிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டணம் பிரிவு–3 "ஐ" பிரகாரம் மாதம் 1–க்கு ரூ.200/– மட்டுமே குப்பை வரியாக விதிக்கப்பட வேண்டும் என்று மனுவில் தெரிவித்திருந்தேன்.

தற்போது மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையாளர் என்னுடைய மனுவினை பரிசீலனை செய்து நான் கோரியவாறு வரி விதிப்பு எண்.115/052/903288–ற்கு குப்பை வரி ரூ.1000/– லிருந்து ரூ.200/– ஆக குறைத்து ஆணையிட்டுள்ளார் என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்."

9. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 (மத்தியம்)–ன் கண்காணிப்பாளர் 26.05.2026 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் திரு.S.V.கார்த்திக் பாபு என்பவரின் மனு பரிசீலனை செய்யப்பட்டு மனுதாரரின் வரி விதிப்பு எண்.115/052/903288க்கு திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டணம் அட்டவணை 1ல், வணிகம் 3ல் வ.எண்.ஐ–ன்படி மாதம் ஒன்றிக்கு ரூ.200/– வீதம் நிர்ணயம் செய்யப்பட்டு, 2023 – 2024–ஆம் ஆண்டு முதல் ரூ.1,000/–லிருந்து ரூ.200/– வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்."

10. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மற்றும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் கண்காணிப்பாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 3, வார்டு எண் 52, தெற்குமாசி வீதி, பச்சரிசிக்கார 2வது சந்து, கதவு எண்.1/2, வரி விதிப்பு எண் 115/052/900417–க்கு உட்பட்ட கட்டிடமானது குடியிருப்பு உபயோகமாகவும், வரிவிதிப்பு எண்.115/052/903288–க்குட்பட்ட சுமார் 85 சதுரடியுள்ள கட்டிடம் வணிக உபயோகமாகவும் பயன்படுத்தப்பட்டு வரும் மனுதாரருக்கு சொந்தமான கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியின் சார்பாக குப்பை வரி மாதம் 1க்கு ரூ.1000/– வீதம் 01.04.2023 முதல் தவறுதலாக விதிக்கப்பட்டது என்பதும், மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டணம் பிரிவு–3 "ஐ" பிரகாரம் மாதம் 1–க்கு ரூ.200/– மட்டுமே குப்பை வரியாக விதிக்கப்பட வேண்டும் என கோரியதின் அடிப்படையில், தற்போது மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையாளர் தன்னுடைய மனுவினை பரிசீலனை செய்து வணிக உபயோகத்திலுள்ள கட்டிடத்தின் வரி விதிப்பு எண்.115/052/903288–ற்கு குப்பை வரி ரூ.1000/– லிருந்து ரூ.200/– ஆக குறைத்து ஆணையிட்டுள்ளார் என்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் திரு.S.V.கார்த்திக் பாபு என்பவரின் மனு பரிசீலனை செய்யப்பட்டு மனுதாரரின் வரி விதிப்பு எண்.115/052/903288க்கு திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டணம் அட்டவணை 1ல், வணிகம் 3ல் வ.எண் "ஐ"–ன்படி மாதம் ஒன்றிக்கு ரூ.200/– வீதம் நிர்ணயம் செய்யப்பட்டு, 2023–2024–ஆம் ஆண்டு முதல் ரூ.1,000/–லிருந்து ரூ.200/– வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் கண்காணிப்பாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் திரு.S.V.கார்த்திக் பாபு என்பவரின் மனு பரிசீலனை செய்யப்பட்டு மனுதாரரின் வணிக உபயோகத்திலுள்ள வரி விதிப்பு எண்.115/052/903288–க்கு திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டணம் அட்டவணை 1ல், வணிகம் 3ல் வ.எண் “ஐ”–ன்படி 2023–2024–ஆம் ஆண்டு முதல் ரூ.1,000/–லிருந்து ரூ.200/– ஆக வரி குறைப்பு செய்து நிர்ணயிக்கப்பட்டுள்ளதை மனுதாரரின் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் கண்காணிப்பாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவித்துள்ளதால், மனுதாரரின் மேற்கண்ட மனு குறித்து மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஜூன்திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. V. கார்த்திக் பாபு,
த/பெ.S.R.S.விவேகானந்தன்,
13, 14–A-S-1 பிளாக்–D,
தனலெட்சுமி நகர்,
மணப்பாக்கம், சென்னை–600 125.

(2) ஆணையர், மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை–625 002.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
ரேஸ் கோர்ஸ் சாலை, மதுரை–625 002.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

23/6/26
செயலாளர்.

22/6/26